திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சென்ற ஆண்டு பட்ஜெட்டில், இம்மாதிரி அரிசன, பிற்பட்ட மாணவர்களுக்குரிய விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதே, அதில் ஏதாவது செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இதுவரை கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதாக உறுதியளித்த வங்கிகள் கடன் கொடுக்க மறுத்துவிட்டன. எனவேதான், இந்த ஆண்டு நலத்துறை மானியத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பழனியில் இருக்கும் அரிசன மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அதன் தரைப் பகுதி முழுவதும் பள்ளமும் மேடுமாக உள்ளது. அதைச் சீர்திருத்திக் கொடுக்க கட்டட உரிமையாளர் மறுக்கிறார். ஆகவே, அந்தக் கட்டடத்திற்கு பதில், அரசாங்கமே புதிய கட்டடம் ஒன்றைக் கட்டி, அங்கு இந்த விடுதியை மாற்றுவதற்கு முன்வருமா? அல்லது, வேறு நல்ல கட்டடத்திற்காவது அந்த விடுதியை உடனடியாக மாற்ற அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, மாணவர் விடுதிகள் இருக்கும் பல கட்டடங்கள் அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை மனத்திலே வைத்துத்தான் அரசு, கடந்த ஆண்டு வங்கிகள் மூலமாக கடனுதவி பெற்று புதிய கட்டடங்கள் கட்டுவதாக இருந்தது. ஆனால், உத்தரவாதம் கொடுத்திருந்த வங்கிகள் பிறகு கடன் தர மறுத்துவிட்டார்கள். அதனால் அரசே சொந்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதிலே எந்தெந்த விடுதிகளை முதலில் எடுத்துக் கொள்வது என்று பரிசிலனை செய்து அந்த விடுதிகளை அரசு கட்ட முன்வரும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுவதைப் பொறுத்து, தனியார் நடத்தும் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு அவர்கள் கட்டடம் கட்டினால் அதற்கு ஏதாவது நிதி உதவி செய்ய அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட திட்டம் இப்பொழுது இல்லை.

* 597 **வினா.—திரு. டி. சி. இம்மசாயக் கவுண்டர் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்டரம்பள்ளியிலும், கத்திலியிலும் அரிசன மாணவர் விடுதி திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1974 மார்ச் 25]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை. ஆயினும், அரிசன நல இயக்குநர் வட ஆற்காடு மாவட்ட நல அலுவலரிடமிருந்து தக்க செயற்குறிப்பு கேட்டுள்ளார். செயற்குறிப்பு வந்த உடன் அது தனியே பரிசீலனை செய்யப்படும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மிக மிகத் தேவைப்படும் இப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்திற்கு வங்கிகள் கடன் கொடுக்க மறுத்து விட்டன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் கடன் கொடுக்க மறுத்ததற்குக் காரணம் என்னவென்று அவர்கள் சொல்கிறார்கள்? அவர்கள் என்ன காரணம் சொன்னாலும், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு வங்கிகள் கடனுதவி செய்யவேண்டும் என்று மத்திய அரசினிடம் எடுத்துச்சொல்லி, அதைப் பயன்படுத்திக்கொள்வது மட்டும் அல்லாமல், ஆயுள் காப்பீட்டுக் கழகம் (லைஃப் இன்ஷுரன்ஸ கார்ப்பரேஷன்) போன்றவற்றிலிருந்தும் கடனுதவி பெற நம்முடைய அரசு ஏதாவது முயற்சிகள் எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வங்கிகளிடமிருந்து வாங்கிய எல்லாக் கடன்களையும் திருப்பிக் கட்டிவிட்டோம். ஆனால், அவர்கள் கூறுவது என்னவென்றால், இப்படிப்பட்ட விடுதிகளுக்கெல்லாம் வங்கிகளிலிருந்து கடன் கொடுத்தால் அதிலிருந்து 'ரிடர்ன்' எதுவும் வர வாய்ப்பு இல்லை; எனவே, இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுவதற்காக நிதி உதவி செய்வதற்கில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். அதைத்தான் இன்றைக்குப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மத்திய அரசுக்கும் அதுபற்றி எழுதியிருக்கிறோம். நாலரை சத வித வட்டிக்கு வங்கிகள் தருவதில்லை; பத்தரை சதவிதம் வட்டி கேட்கிறார்கள். அதையும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு வங்கிகளிடமிருந்து இப்படிப்பட்டவைகளுக்குக்கூட கடனுதவி பெற்றுக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே; இந்த ஆண்டு அதுபோல் எத்தனை விடுதிகள் கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமாக இன்னும் முடிவு எடுக்கவில்லை. நிதி ஒதுக்கீட்டுக்கேற்ப எந்த எந்த விடுதிகளைக் கட்டுவது என்பதை முடிவு செய்ய வேண்டும். எந்த எந்த விடுதிகளில் எத்தனை மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள், எவ்வளவு பெரிய அளவில் கட்ட வேண்டும் என்பதைப் பொறுத்துத்தான் எத்தனை என்று சொல்ல முடியும். இப்பொழுதுதான் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். எத்தனை கட்டடங்கள் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை.

TRUTH ALONE TRIUMPHS

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நாட்றம்பள்ளியிலும் கந்திலியிலும் அரிசன மாணவர் விடுதிகள் திறப்பதற்கு செயற்குறிப்பு இல்லை, அதுகுறித்துப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டு பகுதிகளும் வடார்க்காடு மாவட்டத்திலேயே பிற்படுத்தப்பட்ட பகுதிகளாகும். ஆகவே, அந்த இரு பகுதிகளைக் குறித்து அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தனி அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டிலேயே அங்கு விடுதிகள் திறக்கப்பட முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விடுதிகள் தேவை என்றால், அதுகுறித்து மாவட்ட நல அதிகாரிதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இயக்குநருக்குத் தெரிவிக்கிறார். எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள், எத்தனை மைல் சுற்றுவட்டாரத்திலிருந்து மாணவர்கள் வருகிறார்கள், அவர்களுக்கு ஒரு விடுதி தேவையா என்பதைக் குறித்து மாவட்ட நல அதிகாரி செயற்குறிப்பு அனுப்பவேண்டும். அப்படி செயற்குறிப்பு அவர்கள் அனுப்பவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கருதுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட நல அதிகாரியை அணுகி, இந்தச் செயற்குறிப்பை விரைவில் அனுப்ப ஏற்பாடு செய்வார்களானால், அதை அரசு விரைவிலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

*** 598 வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளை அரசு மேற்கொள்ளும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) அரிசன நலத்துறை உதவி பெற்று தனியார்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளைப் படிப்படியாக அரசு மேற்கொள்வதெனவும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஒழுங்கீனமாக நடத்தப்படுபவைகளை முதலில் மேற்கொள்வதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி ஒவ்வொராண்டும் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, ஒரு சில தனியார் நடத்தும் விடுதிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் அரிசன நல விடுதிகள் நம்முடைய மாநிலத்தில் தற்போது மொத்தம் எத்தனை உள்ளன ? இதுவரை அரசால் எத்தனை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா ?